நாள்.16.10.2023

**அசல் வழக்கு எண். 109/2022**

<u>வா.சா.1 - பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.com படித்துள்ளேன். நான் என்ன பணியில் உள்ளேன் என்றால் பட்டுக்கோட்டை டாஸ்மாக் கடையில் மேற்பார்வையளராக பணியாற்றி வருகிறேன். எனது கொள்ளுதாத்தா பெயர் அந்தோனி உடையார். அவருக்கு 2 மகன்கள் என்றால் சரிதான். அவர்கள் பெயர்கள் 1. சவரிமுத்து, 2.சூசைமுத்து. சூசைமுத்துவிற்கு 2 மகன்கள். அவர்கள் பெயர்கள் 1. ஆரோக்கியசாமி, 2 மைக்கில். ஆரோக்கியசாமிக்கு, நானும் 1ம் பிரதிவாதி கிறிஸ்டின் பால்ராஜ் ஆகியோர்கள் மகன்கள். எனது கொள்ளுதாத்தா காலத்திலிருந்து எங்கள் காலம் வரை சொத்துக்களை வாய்மொழியாகதான் பாகம்பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் பாகப்பிரிவினை செய்துக்கொண்ட சொத்துக்களில் சில சொத்துக்களுக்கு பெரிய தாத்தா சவரிமுத்து பெயரில் பட்டா இருந்து வந்தது என்றால் சரிதான். அவர் இறந்துவிட்டதால் அவரது மகன் சேவியர் எங்களுக்கு சேரவேண்டிய பாக சொத்துக்களுக்கு, விடுதலை ஆவணமாக எழுதிக்கொடுத்துவிட்டார். எனக்கும், சவுரிமுத்து உடையார் சேவியருக்கும் 27.05.2013 ல் தனித்தனியாக பாகப்பாத்திய விடுதலை ஆவணங்கள் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த விடுதலை பத்திரத்தில் கண்ட சொத்துக்களை தவிற இதர சொத்துக்கள் எங்கள் குடும்பத்தில் இல்லை. எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் 2005 ல். எங்கள் குடும்பத்தில் எப்போது வாய்மொழி பாகம் ஏற்பட்டது என்றால் 2004-ல். சேவியரிடமிருந்து விடுதலை பத்திரம் எழுதிவாங்கியது 27.05.2013 என்றால் சரிதான். வாய்மொழி பாகப்பிரிவினையின்போது குடும்ப பூரா சொத்துக்களும் எனக்கும், என் தம்பிக்கும் பாகவீதமாக கொடுத்துவிட்டதால் எனது தகப்பனாருக்கு எந்த ஒரு சொத்தும் ஒதுக்கப்படவில்லை. எனது தாயாருக்கு 1 மா ஒதுக்கப்பட்டது. எனது தாய் , தந்தை வாழ்வதற்கு வாழ்வாதாரம் என்ன என்றால் என் அம்மாவிற்கு சொந்தமான 20 பவுன் மற்றும் 1 மா நிலம் இருந்ததால் அதை கொண்டு வாழ்ந்து வந்தார்கள். எனக்கும்., எனது தம்பிக்கும் பாகம் சமா வீதமாகதான் பிரிக்கப்பட்டது. அந்த சமவீதத்தின் அடிப்படையில்தான் விடுதலை பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது. மேற்கண்ட

ஆவணங்களை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்கண்ட ஆவணங்கள் என்னிடம்தான் உள்ளது. எனக்கு 2 ஏக்கர் 73 செண்ட் விடுதலை பத்திரம் மூலம் கிடைக்கப்பட்டது. எனது தம்பிக்கு விடுதலை பத்திரப்படி 1 ஏக்கர் 46 செண்ட் கிடைத்தது என்றால் சரிதான். வழக்கு சொத்து முருகன், வகையராவிற்கு சொந்தமான சொத்துக்களா என்றால் இல்லை அதற்கு அடுத்த தென்புறம் உள்ள சொத்துதான் முருகன் வகையறாவிற்கு சொந்தமான சொத்துக்கள். வழக்கு சொத்தை நான் யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் நல்லம்மாள், மலையப்பன், குணசேகரன் ஆகிய 3 பேரிடம் மட்டும்தான் கிரையம் வாங்கினேன். நல்லம்மாள் என்பவர் யார் என்றால் முருகன் மனைவி. முருகன் இறந்துவிட்டதால் அவரது மனைவி நல்லம்மாள் மற்றும் மலையப்பன், குணசேகரன் ஆகியோர்களிடருந்து கிரையம் வாங்கினேன். எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிவினையின் படி 2 ஏக்கர் 73 செண்டும், எனது தம்பிக்கு 1 ஏக்கர் 46 செண்டும் விடுதலை ஆவணப்படி கொடுத்துள்ளதற்கு எனது தம்பி 1ம் பிரதிவாதி ஆட்சேபணை செய்யவில்லை. எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட எனக்கு கூடுதலாகவும், எனது தம்பிக்கு குறைவாக பாகம் ஒதுக்கிவிட்டதால் நான் என் தம்பிக்கு பாகம் ஏதும் கொடுக்க முயற்சித்தேனா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு தென்புறம் உள்ள சொத்தானது தற்போது யாரிடம் உள்ளது என்றால் 1ம்பிரதிவாதி கிரிஸ்டின் பால்ராஜ் என்பவரிடம் உள்ளது. 1ம் பிரதிவாதிக்கு அந்த சொத்து எவ்வாறு முருகனிடம் கிடைத்தது என்றால் எனது தந்தை கிரையம் வாங்கியதால் எனது தம்பியிடம். அந்த கிரைய பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எனது தம்பி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வழக்கு சொத்தையும், அதற்கு தென்புறம் உள்ள சொத்தையும் எனது தந்தை முருகன் குடும்பத்தாரிடமிருந்து வாய்மொழி பரிவர்த்தனையாக பெற்றுக்கொண்டு அதற்கு பதிலாக எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சுடுகாட்டிற்கு அருகில் ஒருக்கப்பட்டது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சுடுகாட்டிற்கு அருகில் எங்களுக்கு சொந்தமான சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்களை முருகன் குடும்பாத்தார்களிடம் உள்ளதா என்றால் இல்லை. அந்த சொத்தானது எங்கள் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. தற்போது கோவிந்தராஜ் என்பவரிடம் உள்ளது. அதன் மொத்த விஸ்திரணம் 1-1/2 மா இருக்கும்.

சுடுகாட்டிற்கு அருகில் உள்ள இடமானது சேவியர் என்பவர் பெயரில் பட்டா இருந்ததால் அவர் விற்பனை செய்துவிட்டார். நான் தாக்கல் செய்துள்ள பதில் வழக்குரையில் சுடுகாட்டிற்கு அருகில் உள்ள இடமானது சேவியருக்கு சொந்தமான சொத்து என்றும், அவர் கோவிந்தராஜ் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின்பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.